**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590

**ஆணை நாள்: 17.09.2019 ((முற்பகல்)**

**முன்னிலை**

**திரு ச.செல்வராஜ், எம்.ஏ., பி.எட்.,**
**மாநில தகவல் ஆணையர்**

•••••••••

**வழக்கு எண்.NC 165/E/2019 (SA 4353/E/2017)/X**

திரு M.வேலாயுதம் ... மேல்முறையீட்டாளர்

Vs.

பொதுத் தகவல் அலுவலர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
வாலாஜாபாத் வட்டம்,
காஞ்சிபுரம் மாவட்டம். ... பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 21.12.2016 |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | 13.02.2017 |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | 06.06.2017 |
| ஆணையத்தின் ஆணை நாள் | 18.12.2018 |
| ஆணையத்திற்கு மனு நாள் | 06.02.2019 |

******

**ஆணை**

இன்று (17.09.2019) முற்பகலில் இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு மேல்முறையீட்டாளர் திரு M.வேலாயுதம் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக,

பொதுத் தகவல் அலுவலர், திருமதி N.சசிகலா, தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், வாலாஜாபாத் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம் ஆஜரானார்.

2. மேல்முறையீட்டாளர் 21.12.2016 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் 6 சர்வே எண்களைக் குறிப்பிட்டு, மேற்படி சர்வே எண்கள் தொடர்பாகப் பட்டா பெயர் மாற்றம் மற்றும் ரத்து செய்யக் கோரி தான் அளித்த 30.06.2014 மற்றும் 23.02.2015 தேதியிட்ட மனுக்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த விபரம், நடவடிக்கை எடுக்கப்படவில்லையெனில் அதற்கான காரணம் என்ன, நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பின் அதன் முடிவுகள் குறித்த விபரங்கள் மற்றும் அதன் நகல், எதிர் தரப்பினர் ஏதேனும் வாக்குமூலம் மற்றும் ஆவணங்கள் அளித்திருந்தால் அவைகள் குறித்த விபரங்கள் மற்றும் அவைகளின் நகல், உரிய காலத்திற்குள் தனக்கு ஏன் தகவல் அளிக்கப்படவில்லை என்பதற்கான காரணங்கள் என 5 இனங்களில் தகவல் கோரி, பொதுத் தகவல் அலுவலர், வாலாஜாபாத், காஞ்சிபுரம் என விலாசமிட்டுத் தாக்கல் செய்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலரால் தான் கோரிய தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை வழங்க உத்திரவிடுமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 13.02.2017 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன்கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், காஞ்சிபுரம் அவர்களுக்குத் தாக்கல் செய்துள்ளார். அதன் பின்னரும் பொது அதிகார அமைப்பினரால் தான் கோரிய தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை வழங்க உத்திரவிடுமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 06.06.2017 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன்கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில், 18.12.2018 தேதியிட்ட ஆணையின் வாயிலாக மேல்முறையீட்டாளர் கோரிய தகவலை ஆணை கிடைக்கப்பெற்ற 30 நாட்களுக்குள் மேல்முறையீட்டாளருக்கு வழங்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்திரவிட்டுள்ளது. ஆணையம் உத்திரவிட்டபின்னரும் தான் கோரிய தகவல் பொது அதிகார அமைப்பினரால் வழங்கப்படவில்லையென்று தெரிவித்து மேல்முறையீட்டாளர் 06.02.2019 தேதியிட்ட மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். அம்மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (17.09.2019) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளர் ஆஜராகி, தான் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவிற்குப் பொதுத் தகவல் அலுவலரால் தகவல் வழங்கப்படாததால், சட்டப்பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவும், சட்டப்பிரிவு 19(3)-ன்கீழ் ஆணையத்திற்கு இரண்டாம் மேல்முறையீட்டு மனுவும் தாக்கல் செய்துள்ளதாகவும், இதுநாள்வரைப் பொது அதிகார அமைப்பினரால் முழுமையான தகவல் தனக்கு வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை முழுமையாக வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடுமாறும் தனது வாதுரையை ஆணையத்தின் முன்பு எடுத்துரைத்தார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

5. இன்றைய விசாரணையில் பொது அதிகார அமைப்பின் சார்பாக ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், தான் இரண்டு நாட்களுக்கு முன்னர் தான் மேற்படி பணியில் பொறுப்பேற்றதாகவும், மேல்முறையீட்டாளர் கோரியுள்ள தகவலை 15 தினங்களுக்குள் வழங்குவதாகவும் தெரிவித்தார். பொதுத் தகவல் அலுவலரின் வாதுரையை ஆணையம் பதிவு செய்து, விசாரணையின் முடிவில் கீழ்க்கண்ட உத்திரவு பிறப்பிக்கப்படுகின்றது:

1. மேல்முறையீட்டாளர் 21.12.2016 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரியுள்ள தகவலை அலுவலக ஆவணங்களின் அடிப்படையில், இனம்வாரியாக, முறையாக மற்றும் முழுமையாக இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 7(6)-ன்கீழ் கட்டணம் ஏதுமின்றி ஒப்புகை அட்டையுடன்கூடிய பதிவஞ்சலில் மேல்முறையீட்டாளருக்கு அனுப்பி, அதனை அவர் பெற்று ஏற்பளிப்பு செய்த விபரத்தை இவ்வாணை கிடைக்கப்பெற்ற 30 தினங்களுக்குள் ஆணையத்திற்குச் சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடப்படுகின்றது.

2. மேல்முறையீட்டாளர் 21.12.2016 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவிற்கு உரிய காலத்தில் தகவல் வழங்காததற்குச் சம்பந்தப்பட்ட பொதுத் தகவல் அலுவலர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 20(1)-ன்கீழ் ஏன் அதிகபட்ச அபராதம் ரூ.25,000/- விதிக்கலாகாது என்பதற்குரிய விளக்கத்தையும், சட்டப்பிரிவு 29(2)-ன்கீழ் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க உயரதிகாரிகளுக்கு ஏன் பரிந்துரைக்கக்கூடாது என்பதற்குரிய விளக்கத்தைப் பெற்று, இவ்வாணை கிடைக்கப்பெற்ற 30 தினங்களுக்குள் ஆணையத்திற்குச் சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடப்படுகின்றது.

ஒம்/- ச.செல்வராஜ்
மாநில தகவல் ஆணையர்

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

<u>வழக்கு எண்.NC 165/E/2019 (SA 4353/E/2017)/X</u>

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
வாலாஜாபாத் வட்டம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

**<u>மனுதாரர்</u>**

திரு M.வேலாயுதம்,
த/பெ. மாணிக்க நாயக்கர்,
எண்.336, திருவள்ளுவர் சாலை,
திருக்காலிமேடு,
காஞ்சிபுரம் மாவட்டம்.

Copy to: Judgement File.
20/09/19